# ● கிளாலி கடலில் தாக்குதல்; படகோட்டி பலி
# பயணிகளுடன் ஆறு படகுகளை காணவில்லை!

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 15 இதழ் 293
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 30 — 11 1992

(பளை) கிளாலி கடற்பகுதியில் கடற்படையினர் நடத்திய தாக்குதலில் ஒருவர் பலியானதுடன் பயணிகளுடன் சென்ற ஆறுபடகுகள் காணாமல் போய்விட்டதாக தெரி (2ம் பக்கம் பார்க்க)

## இராணுவ முகாம்களுக்கு அமைச்சர்கள் திடீர்விஜயம்

(கொழும்பு) வவுனியா படை முகாம்களுக்கு அமைச்சர்கள், எம்.பி.க்கள், படைத் தளபதிகள் பலர் திடீர் விஜயங்களை மேற்கொண்டுள்ளனர்.

படையினரின் வசதி வாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கில் இந்த விஜயம் அமைந்ததாம். கடந்த சில தினங்களுக்கு முன் மாகாண சபை அமைச்சரும், (2ம் பக்கம் பார்க்க)

## படைகளுக்கு உதவ ஜனாதிபதி நடவடிக்கை

(கொழும்பு) வடக்கு கிழக்குப் பகுதிகளில் காப்பரண்களின் கடமையாற்றும் படையினருக்கு சகல வசதிகளும் செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (2ம் பக்கம் பார்க்க)

★ அமைதி முயற்சிகள் தோல்வியுற்றால்

# இலங்கையில் அபாயகரமான அரசியல் பிரச்னை ஏற்படலாம்!

## அரசியல் ராணுவ நிபுணர்கள் எச்சரிக்கை

(கொழும்பு) இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் அமைதி முயற்சிகள் தோல்வியுறும் பட்சத்தில் அபாயகரமானதொரு அரசியல் பிரச்னையை இலங்கை அரசு சந்திக்க வேண்டிவரும் என்று அரசியல் மற்றும் இராணுவ நிபுணர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

மேலும் தமிழ் மக்களுக்கு கூடுதலான சுயாட்சி உரிமையை வழங்க வேண்டும் என்பதில் இரு தரப்பினரிடையேயும் உள்ள அரசியல்வாதிகளிடையே பெரிதும் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. இதனால் அமைதிக்கான முயற்சிகள் சீர்குலையும் அபாயம் நேரிட்டுள்ளதாகவும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளையில் தமிழர்களின் உண்மையான அபி (2-ம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சி குறித்து முன்னாள்தளபதி அதிருப்தி

(கொழும்பு) தற்போது நடைபெற்று வரும் சமாதான முயற்சிகள் குறித்து தாம் பெரிதும் அதிருப்தி அடைந்திருப்பதாக முன்னாள் விமான படைத்தளபதி ஹரி குணதிலக தெரிவித்துள்ளார்.

தமிழீழம் என்பது இந்த நூற்றாண்டின் இறுதியில்தான் சாத்தியமாகும் என முன்பு இவர் கருத்து தெரிவித்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ச)

## யுத்தம் நிறுத்தப்பட்டால் வறுமை ஒழிக்கப்படும்

(கொழும்பு) "வடக்கு - கிழக்கில் தொடரும் தேவையற்ற யுத்தம் நிறுத்தப்படுமானால் வடக்கு - கிழக்கில் மட்டுமல்ல நாடு முழுவதிலும் இருந்தே வறுமை நிலையை விரட்டி (4-ம் பக்கம் பார்க்க)

● 9 மாகாணங்களை எல்லைகளாகக் கொண்ட

## சமஷ்டி தீர்வு யோசனையை தமிழ்க்கட்சிகள் நிராகரிப்பு

(கொழும்பு) ஒன்பது மாகாணங்களை எல்லையாக கொண்ட சமஷ்டி முறையிலான தீர்வை இ.தொ.கா.வும் 7 தமிழ் கட்சிகளும் நிராகரித்துள்ளன.

இனப்பிரச்னைக்கு தீர்வாக ஈ.என்.டி.எல்.எவ். முன் வைத்துள்ள, 9 மாகாண எல்லைகளை அடிப்படையாக கொண்ட சமஷ்டி ஆட்சிமுறை யோசனையை அமைச்சர் திரு. தொண்டமானும் மற்றும் 7 தமிழ் கட்சிகளும் முற்றாக நிராகரித்துள்ளன. (2-ம் பக்கம் பார்க்க)

## பத்து வருடப் போரில் ஐம்பதினாயிரம் பேர் பலி

(யாழ்ப்பாணம்) வடக்கு கிழக்கில் கடந்த 10 வருடமாக தொடரும் யுத்தத்தினால் 50 ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டும் 10 லட்சத்திற்கும் மேற்பட்டோர் அகதிகளாயுமுள்ளனர். பெருமளவு சொத்துக்கள் நாசமாக்கப்பட்டுள்ளன. பெருந்தொகையான மக்கள் அங்கவீனர்களாகியுள்ளார் (4-ம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டவர்களுக்கு எதிராக ஜெர்மனியில் பெரும் ஆர்ப்பாட்டம்

(பேர்லின்) வெளிநாட்டவர்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் ஜெர்மனியின் முக்கிய பல நகரங்களில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இவ்ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (2ம் பக்கம் பார்க்க)

## சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்) தலையில் காயங்களோடும் கைகள், கால்கள் சேலைத் துணியால் கட்டப்பட்ட நிலையில் இறந்தவரின் சடலம் ஒன்று கோப்பாய் கைதடி வீதிப்பாலத்திற்கண்மையில் உள்ள கிணற்றில் இருந்து மீட்கப்பட்டு தமிழீழ காவற்றுறையினரால் நேற்று பிற்பகல் யாழ். பெரியாஸ்பத்திரி (2-ம் பக்கம் பார்க்க)

## 1,48000 பேரின் தொழில் பாதிப்பு

(யாழ்ப்பாணம்) இராணுவ நடவடிக்கையால் யாழ். குடாநாட்டில் மட்டும் ஒரு லட்சத்தி 48 ஆயிரம் பேர் தாம் செய்து வந்த தொழில்களை இழந்துள்ளார்கள் 88 ஆயிரம் பேர் தொழில் புரியும் வயது வந்தும் தொழில் புரியும் வாய்ப (4ம் பக்கம் பார்க்க)

## சென்னையிலிருந்து 36 ஈழத்தமிழர்கள் வெளியேற்றப்பட்டனர்!

(சென்னை) சென்னையில் பதிவு செய்யாதிருந்த 36 இலங்கைத் தமிழர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இராமநாதபுர மாவட்டத்தில் உள்ள மண்டபம் சிறப்பு முகாமில் இவர்கள் தற்போது தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றுதெரிவிக்கப்பட்டது (ச)

## ராணுவ நடவடிக்கை குறித்து படை அதிகாரிகள் ஆராய்வு

(கொழும்பு) உயர் இராணுவ அதிகாரிகள்குழு ஒன்று வடக்கு கிழக்கு இராணுவ முகாம்களுக்கு விஜயம் செய்து புதிய ராணுவ நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்ததாகத் தெரியவருகிறது.

கூட்டுப்படைத் தலைமையகத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்ன, சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஆரியசிங்க உட்பட உயர் (4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### நோவு வைத்தியம்

ஒட்டகபுலம் சமத்தர் நோவு எண்ணை கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி—6888)

### முதலாம்பிள்ளை

பரிசளிப்பதற்கேற்ற, சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற நூல் அராலியூர் சுந்தரம்பிள்ளை எழுதிய முதலாம்பிள்ளை 30 ரூபா கழிவு 20 வீதம் 30, கடையிற்சுவாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (சி—6963)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வ, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலைசாலவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள் மூத்திரரோகங்களில் பிரபலமான ..., சகலவியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர்கி. இராசரத்தினம், 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி—6954)

### விற்பனைக்கு

வியாபாரிகள் தங்கள் வியாபார ஸ்தாபனத்தை விளம்பரம் செய்வதற்கு தேவையான கலண்டர்களை எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் தகுந்த கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம். அச்சுப்பதிவு செய்யப்படாத கலண்டர்கள், சிலிப்புகள் விற்பனைக்குண்டு. ஸ்ரீகாந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். [எ—2602]

### புதிய வகுப்புகள் (1993 கல்வியாண்டு)

1993 கல்வியாண்டிற்கான புதிய வகுப்புகள் ஆண்டு 4 தொடக்கம் ஆண்டு 11 வரை சகல பாடமும் கற்பிக்கப்படும். வகுப்பு ஆரம்பம்: 01-12-92 செவ்வாய் (நாளை) பிற்பகல் 3,00 மணி. புதிய கல்வி நிலையம். 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி 7012)


## இலவச பொருட்கள்

(அரியாலை)

யாழ்-சுண்டுக்குளி மறையங்கைச் சேர்ந்த வறிய குடும்பங்களுக்கு ஒவ்வொரு குடும்பத்துக்கும் 28ந் திகதி காலை வை. எம். சீ. ஏ. மண்டபத்தில் வைத்து ஒரு அரிக்கன் விளக்கும் ஒரு ... வையும் இலவசமாக வழங்கப்பட்டன. (59)

## மழை அங்கி வழங்கப்படவில்லை

(தாவடி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் அஞ்சல் அலுவலகம் உப அஞ்சல் அலுவலகங்களில் கடமை புரியும் சிற்றூழியர்களுக்கு மழை காலங்களில் அணிவதற்குரிய மழை அங்கிதொப்பி என்பன பலவருடங்களாக அஞ்சல் திணைக்களத்தால் வழங்கப்படவில்லை.

சில அலுவலகங்களில் கடமையாற்றும் சிற்றூழியர்களுக்கு கடந்த பல வருடங்களாக கோலவுடைக்குரிய காக்கி பொலியஸ்ரர் துணியும் வழங்கப்படவில்லை (175)

## கிராமசேவையாளருக்கு பயிற்சி அளிக்க ஏற்பாடு

(உடுவில்)

அலுவலக வேலைகள், முகாமைத்துவம் பொதுசனத் தொடர்பு போன்ற பல துறைகளில் கிராமசேவையாளர்களுக்கு விரைவில் பயிற்சி அளிக்க ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன

இம் முகாமைத்துவப் பயிற்சியில் கலந்துகொள்வதற்காக முதல் தொகுதியில் நாற்பது கிராமசேவையாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள இப்பயிற்சிகள் மூன்று மாத காலம்வரை நடைபெறும் எனத் தெரியவருகிறது. (109)

## இடம்பெயர்ந்தவர்களுக்கு பெட்சீற், பாய் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

கொழும்பிலுள்ள வை.எம். சி. ஏ. தேசிய சபை சண்டிலிப்பாய், மானிப்பாய், உடுவில் பகுதிகளிலுள்ள இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் அகதிமுகாமிலுள்ளவர்களுக்கு குடும்பத்திற்கு ஒரு பாய் என்ற அடிப்படையில் பாய்களை வழங்கியுள்ளது.

இதேவேளை பண்டத்தரிப்பு வை. எம். சி ஏ குடும்பத்திற்கு ஒரு பெட்சீற் என்ற அடிப்படையில் பெற்சீற்றுகளை வழங்கியுள்ளது. (72)

## ச. ச. நிலையத்தில் குழாய்க்கிணறு

(கொழும்புத்துறை)

வலிமேற்கு பிரதேசசபையின் சுளிபுரம் உப அலுவலகத்தின்கீழ் இயங்கும் தாலிபுரம் கிழக்கு ... கினேஸ்வரா சனசமூக நிலையத்தில் அண்மையில் குழாய்க் கிணறு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (154)

## படிவங்கள் தட்டுப்பாடு

(தாவடி)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல உப அஞ்சல் அலுவலகங்களிலும் நாளாந்த பாவனைப் படிவங்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

முக்கியமாக உபஅஞ்சல் அதிபர்கள் நாளாந்தம் பாவிக்கும் கணக்குத் தாள் இல்லாமல் வெற்றுத்தாள்களில் நாளாந்தம் கணக்குகளைச் செய்து சுட்டுப்பாட்டு அஞ்சல் அலுவலகத்திற்கு அனுப்பிவருகின்றனர். (163)

## இராசி பலன்

**30-11-1992**

**(தமிழுக்கு கார்த்திகை 15)**

**திங்கட்கிழமை**

ஷஷ்டி மு. இ. 808 வரை: திருவோணம் பி. ப. 1-28 வரை அமிர்தசித்தயோகம் இராகுகாலம் காலை 7-44 முதல் 9-14 வரை சுபநேரம் காலை 12-44 முதல் 1-44 வரை.

மேடம்: எதிர்பார்த்தவை வெற்றி, மனமகிழ்ச்சி திடீர் பயணம்.

இடபம்: புதிய திருப்பம், சிறுகுழப்பம், உடல்உபாதை.

மிதுனம்: அதிருப்தியான நிலை, பெண்களால் குழப்பம் பகை.

கடகம்: அதிக சிந்தனை, புத்திரர் பெருமை, தியானம்

சிங்கம்: தொழில் அபிவிருத்தி, அன்னியர் உதவி, தெய்வீக வழிபாடு.

கன்னி: நினைத்துப்புலம்பல், மனச்சுமை, சிறுபிரச்னை.

துலாம்: கருத்துவேறுபாடு உடல் பாதிப்பு முன்கோபம்

விருச்சிகம்: பெரியவர் ஆசி, சுபகாரியம், காரியசித்தி.

தனுசு: எதிர்ப்புக்கள், காரிய ஏமாற்றம், அலைச்சல்.

மகரம்: வெற்றிவாய்ப்பு. உல்லாச பயணம், குடும்ப சுகம்.

கும்பம்: தொழில் நஷ்டம், குடும்ப பகை, வெறுப்பு.

மீனம்: பணவரவு, புதிய சந்திப்பு, திடீர்யோகம்.

— ஜோஸ்யர்

## மக்கள் அஞ்சலி

(அரியாலை)

பலாலி இராணுவ முகாம் அரண்கள் தகர்டபில்பலியான வீரவேங்கை நலகயன் அன்று யாழ். அச்சக வீதியைச் சேர்ந்த தேவராசா ஜெகநேசன், என்பவருடைய பூதவுடல் கடந்த 26-ந் திகதி மக்கள் அஞ்சலிக்காக அவரது இல்லத்தில் வைக்கப்பட்ட போது பெருந்திரளான மக்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர். (59)

0 0 0

'பருத்தித்துறை'

லெப்டினன் பார்த்திபனின் (ஐயாத்துரை பிரபாகரன், உதிராவத்தை, பருத்தித்துறை) புகழுடம்புக்கு புலோலியில் மக்கள் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினார்கள்.

இவ்வஞ்லிக் கூட்டத்திலே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க மகளிர் முன்னணி வடமராட்சிப் பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இறுதி மரியாதைகளுடன் லெப்டினன் பார்த்திபனின் புகழுடம்பு விதைக்கப்பட்டது. (52)

## படைகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவின் விசேட உத்தரவின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்காக அமைச்சர்கள், படைத்தளபதிகள், அரசஉயர் அதிகாரிகள் கொண்ட விசேட குழு ஒன்றும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## இராணுவ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டு அலுவல்கள் ராஜாங்க அமைச்சருமான திரு. ஜோன் அமரதுங்க, முஸ்லிம் அலுவல்கள் ராஜாங்க அமைச்சர் ஏ. எம். எம். அஸ்வர், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலர் ஏயர் சீவ் மாஷல் வால்டர் பெர்ணாண்டோ, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டொனல்ட் திஸநாயக்கா ஆகியோர் இவ் விஜயத்தை மேற்கொண்டனர்.

இவர்கள் வவுனியாவில் பல படைமுகாம்களுக்குச் சென்று பார்வையிட்டனர்.

வடபகுதி இராணுவத் தலைபதி பிரிகேடியர் ஜேகான் தலுவத்த, வவுனியா பிரதேச தளபதி பிரிகேடியர் கலபாகம, லெப். கேர்ணல் சுனில் தென்னக்கோன், பாதுகாப்பு அமைச்சின் பிரதிநிதி கேர்ணல் திஸ்நாயக்கா, மேஜர் மகிந்த குலசூரியவும் அமைச்சர்களுடன் சென்றிருந்தனர். (சி)

## கிளாலி கடலில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்படுகிறது.

நேற்று அதிகாலை 2-00 மணியளவில் கிளாலி கரையிலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு ஆறு படகுகள் ஆலங்கேணி நோக்கிச் சென்று கொண்டிருந்த போது கடற் பகுதியில் நின்ற கடற்படையினர் சரமாரியாக தாக்குதல் நடத்தினர்கள்.

இத்தாக்குதலினால் பயணிகள் பெரும் பீதியடைந்தனர். சிலர் படகுகளிலிருந்து கடலில் குதித்ததாகவும் இவ்வாறு குதித்தவர்களில் கரையை நோக்கி நீந்தி வந்த படகோட்டி ஒருவர் நீரில் மூழ்கிப் பலியானார்

முருகன் சிவபாதம் ஏசியன் (34 வயது) மாமூனை என்பவரே நீரில் மூழ்கிப் பலியானவராவர், இவர் பத்து நாட்களின் முன் பதிவுத்திருமணம் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரின் சடலம் கடற்புலிகளால் மீட்கப்பட்டு உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. இவருடன் வந்த மற்றொரு படகோட்டியான இவரது சகோதரர் கிளாலிக்கரையை வந்தடைந்துவிட்டார்.

இதேவேளை ஆறுபடகுகளும் அதில் பயணம் செய்தவர்களின் விபரம் பற்றியும் நேற்று வரை எவ்வித தகவலும் கிடைக்கவில்லை.

நேற்றுப்பகல் 2 00 மணியளவில் கிளாலி கடல்பகுதியில் கடற்படையினரின் நடமாட்டம் அதிகரித்து காணப்பட்டதாக கூறப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட சம்பவங்களைத் தொடர்ந்து நேற்று கிளாலி படகு சேவைதடைப்பட்டது.

இது இவ்வாறிருக்க கொழும்பு செல்வதற்காக நேற்று மாலை வரை பெருந்தொகையான பயணிகள் கிளாலிநோக்கிசென்ற வண்ணமிருந்தனர் (1:6)

## சடலம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இளவாலையிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது கைதடி நுணாவில் பகுதியில் வசித்து வருபவரான யக்காரியாஸ் செபமாலை (45 வயது) என்பவரின் சடலமே காவற்துறையினரால் கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டதாக தெரியவருகிறது. (56)

## 9 மாகாணங்களை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக கருத்து மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய நேற்று 7 தமிழ் கட்சிகளும் கூடி ஆராய்ந்தன. [சி-8

## வெளிநாட்டவர்களுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜெர்மனியின் தென்பகுதியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் துருக்கியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டுள்ளார்.

இதேவேளையில் சிலதினங்களுக்குமுன் கிழக்கு ஜெர்மன் பகுதியில் வெளிநாட்டார் வசித்த இல்லம் ஒன்று விஷமிகள் சிலரால் தீக்கிரையாக்கப்பட்டதும் இவ்இல்லத்தில் தங்கியிருந்த சுமார் 25 பேர் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டதும் தெரிந்ததே.

ருமேனியா, பல்கேரிய மற்றும் ஆபிரிக்க இனத்தைச் சேர்ந்தோரே இவ் இல்லத்தில் வசித்து வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க

## அமைதி முயற்சிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லாசைகளை கவனத்தில் கொள்வதில் நாடாளுமன்ற தெரிவுக்குழு முழு முயற்சியையும் கையாளவில்லையென்றும் பேச்சுவார்த்தையில் மட்டும் சிறிதளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் கருத்து வெளியிட்டுள்ளனர். (ரி-க)


யாழ். வட்ட லியோ கழகம் நடாத்தும்

சோபன ஆடையகம் ஆதரவிலான

# வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி 1992

மேற்படி சுற்றுப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் 10-12-92ற்கு முன்னர் விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

சோபன ஆடையகம், பெரியகடை, யாழ்.

குறிஞ்சி பார்மஸி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

யாழ். வட்ட லியோ கழகம், 82, புங்கங்குளம் வீதி.

(சி-7013)

சைவ உணவகத்திற்கு

# தொழிலாளர்கள் தேவை

1. சமையலும் சுவீற் வேலை தெரிந்தவர்கள்
2. இடியப்பம் தயாரிப்பவர்
3. அரவை
4. குசினி வேலை உதவியாளர்கள்
5. ரீ மேக்கர்
6. தோசை போடுபவர்
7. உணவு பரிமாறுபவர்கள்
8. மேசை சுத்தம் செய்யும் பையன்கள்
9. காசாளர்
10. பில் கிளார்க்

மேற்குறிப்பிட்டுள்ள தொழிலாளர்கள் நேர்மையும் நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்

முன் வேலை செய்த ஸ்தாபனங்களிலுள்ள நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் சமூகம் தரவும்

# மலாயன் கபே

36, 38, பெரிய கடை வீதி யாழ்ப்பாணம்.

(சி-7015)


உறவை வளர்ப்பது போல் மனிதா மரத்தையும் நீ வளர்க்கலாமே.

# திருமலையில் தமிழ்மக்கள் விரட்டப்பட்ட இடங்களில்

# ஊனமடைந்த படையினரை குடியமர்த்த ஏற்பாடு

## — சிங்கள மயமாக்கலுக்கு அரசு தீவிர முயற்சி —

(திருமலை)

திருகோணமலையில் பரம்பரை பரம்பரையாக தமிழ் மக்கள் குடியிருந்த லிங்கநகர், பாலையூற்று போன்ற கிராமங்களில் தமிழ் மக்களை சிறிலங்கா அரசு விரட்டியடித்து காணிகளை சுவீகரித்துகாயமடைந்து அங்கவீனமான இராணுவத்தினரை குடியமர்த்துவதற்குரிய ஆரம்ப நடவடிக்கைகளில் தற்போது ஈடுபட்டுள்ளது.

சுவீகரித்த காணிகளிலுள்ள தமிழ்மக்களின் உடைந்த வீடுகளை முற்றாக அழித்து குடியேற்றத்திட்ட வீடுகளை அமைப்பதற்குரிய நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவந்த தமிழ்மக்கள் இன்று விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். லிங்கநகரிலும், பாலையூற்றிலும் தமிழ் மக்கள் குடியிருந்த காணிகளில் இராணுவக்குடியேற்றங்களை நடைமுறைப்படுத்துவதன்மூலம் எஞ்சியுள்ள தமிழ்மக்களையும் இங்கிருந்து விரட்டியடித்து சிங்களமக்களின் கிராமங்களாக இவ்விரு தமிழ்க்கிராமங்களையும் மாற்றுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றது.

### சிங்களக் குடியேற்றம்

கொழும்பில் இருந்துவந்த கடற்றொழில் திணைக்களத்தின் தலைமைச் செயலகத்தை, திருகோணமலை நகரத்துக்கு அண்மையில் அரசாங்கம் மாற்றியுள்ளது. இதன்மூலம் திருகோணமலை மாவட்டத்தில் மீன்பிடித் தொழிலாளர்களாகிய சிங்கள மக்களை குடியேற்றி வருகின்றது. தற்போது திருகோணமலையில் மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் அனைவரும் சிங்கள மக்களே. திருகோணமலையிலுள்ள கடற்றொழில் திணைக்களம் இங்குள்ள மீன்பிடித்தொழிலாளர்களுக்கு பல மான்யங்களையும் சலுகைகளையும் வழங்குவதன்மூலம் மீன்பிடித் தொழிலாளர்களின் வருகை திருகோணமலையில் அதிகரிக்கின்றது சலுகைகளையும் மான்யங்களையும் மீன்பிடித்தொழிலாளர்களுக்கு வழங்குவதன் மூலம் சிங்கள மக்கள் வாடிகளை அமைத்து தொழிலை மேற்கொண்டு ஏற்கனவேயுள்ள சிங்களக் குடியேற்றங்களிலும் தமிழர்களின் வீடுகளிலும் குடியேறிவருகின்றனர்.

இலங்கையின் நாலாபுறங்களிலுமுள்ள சிங்கள மீன்பிடித் தொழிலாளர்களும் திருகோணமலை மாவட்டத்தில் குடியமர்வதற்கு தற்போது ஆர்வம் காட்டி வருகின்றனர்.

### தம்பலகாமம்

தம்பலகாமம் என்னும் தமிழ்க்கிராமம் திருகோணமலை நகரத்தில் இருந்து சில மைல் தூரத்தில் அமைந்துள்ளது இந்தக்கிராமத்தில் வாழ்கின்ற அனைத்து தமிழ் மக்களும் இன்று அகதி முகாம்களிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

இங்கு ஆண்களைக்காணவே முடியாது. குடும்பப்பெண்களும் சிறுவர், சிறுமிகளுமே வாழ்ந்து வருகின்றனர். குடும்பத் தலைவர்கள்கூட இங்கு முஸ்லிம் காடையர்களினாலும் ஊர்காவல் படையினராலும் கொடூரமாக முன்னர் சுட்டும், வெட்டியும் கொலைசெய்யப்பட்டபின்னர் பலர் வாழ்வதில்லை எஞ்சியுள்ள ஆண்பகுதி தலைவர்கள் திருகோணமலை நகரத்துக்குள்ளேயே வசித்து வருகின்றனர்.

தம்பலகாமத்தில் தமிழ் மக்களின் வயல் நிலங்கள் இன்று சிங்கள மக்களினாலும் முஸ்லிம் மக்களினாலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. ஒருசில வயல் நிலங்கள் வெறுமனே காட்சியளிக்கின்றன. அகதி முகாம்களில் வாழ்கின்ற தமிழ்ப் பெண்கள் பகல்நேரங்களில் தமது வீடுகளுக்குச் சென்று உணவைச் சமைத்துக்கொண்டு உடனேயே அகதி முகாம்களுக்கு சமைத்த உணவுடன் திரும்புகின்றனர்.

### திருமலைத் துறைமுகம்

இயற்கைத் துறைமுகமான திருமலைத் துறைமுகத்தில் தமிழ்த் தொழிலாளர்களின் தொகை நாளுக்குநாள் குறைந்து கொண்டே போகின்றது. சிங்களவர், முஸ்லிம்களுமே மிகக்கூடுதலாக முன்னர் இங்கு தமிழ்த் தொழிலாளர்களே இருந்தார்கள். இன்று சிங்களவர்களே கூடுதலான தொழிலாளர்களாக தொழில் புரிந்து வருகின்றனர். இளைப்பாறும் தொழிலாளர்களுக்குப் பதிலாக முழுக்க முழுக்க சிங்களவர்களும், முஸ்லிம்களுமே நியமனம் செய்யப்படுகின்றனர். சகல வழிகளிலும் அரசாங்கம் இன்று திட்டமிட்டு திருகோணமலைமாவட்டத்தை துரிதகதியில் சிங்கள மாவட்டமாக மாற்றி வருகின்றது.

திருகோணமலை மாவட்டம் இன்று சிங்கள முஸ்லிம் மக்களினாலும் இராணுவத்தாலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பிரதேசமாக இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (137)

# சேர் பொன்னம்பலம் இராமநாதனின்

# கல்விப்பணி நினைவுகள்

ஆர். எஸ். நடராசா
(அதிபர்
பலாலி ஆசிரியர் பயிற்சி
கலாசாலை)

இலங்கையில் சென்ற நூற்றாண்டில் தேசிய எழுச்சியின் முன்னோடித் தலைவர்களுள் ஒருவரான சேர். பொன்னம்பலம் இராமநாதன் பல துறைகளில் தேசிய எழுச்சியை இலக்காகக் கொண்டு அரும் பணி ஆற்றியுள்ளார். அப்பணிகளுக்கெல்லாம் பெரும் பணியாக மதிக்கத்தக்கது அவரது கல்விப்பணியே ஆகும். அவரது கல்விப் பணிக்கு நிலையான நினைவாலயமாக இன்று நிலைத்து நிற்பது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பதில் ஐயமில்லை.

இராமநாதனின் கல்விப் பணி ஒப்பற்றது. அவர் அரை நூற்றாண்டுக்கு மேலாகக் கல்வியைத் தேசிய பண்பாட்டுப் பின்னணியில் பரவலாக்கி அதனைவாழ்க்கைப் பயன்மிக்கதாக வழங்க வேண்டும் எனத் திரிகரண சுத்தியோடு அரும் பணியாற்றியுள்ளார். "தென் கிழக்காசியாவில் யாழ்ப்பாணக் குடாநாடே கல்விமிக்க பிரதேசம்" எனப் பாராட்டப்படுவதற்கு இராமநாதனின் கல்விப் பங்களிப்பே முக்கிய காரணமாகும்.

தேசிய கல்வி விருத்தி வரலாற்றில் முக்கியஇடம்பெறும் தாய் மாமன் சேர். முத்துக்குமாரசாமியையும், ஆறுமுக நாவலரையும் அடியொற்றி அவர்கள் தொடங்கிய கல்விப் பணியினை தனது வாழ்க்கைப் பணியாகக் கொண்டு அரை நூற்றாண்டு அயராது கல்விப் பணியில் ஈடுபட்ட சாதனை வீரராவார். 1879 ஆம் ஆண்டிலிருந்து 1930 இல் அவர் சமாதி அடையும் வரை ஆரம்பக் கல்வி, தாய்மொழிக் கல்வி, இலவசக் கல்வி, பெண் கல்வி, ஆசிரியர் கல்வி, சிறுமியர் நிறைவாழ்வுக் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி எனப் பல துறைகளிலும் கவனம் செலுத்தி வெற்றிகண்டார்.

சைவபரிபாலன சபையின் கல்வி முயற்சிகளுக்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆரம்பத்திற்கும் இராமநாதனின் ஆதரவு இருந்தது. அவரின் ஊக்குவிப்பாலும், உதவியாலும் 1910 ம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தில் தேசிய கல்விச் சூழலை வழங்கும் பல ஆரம்ப இடைநிலைக் கல்விக் கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

தேசிய எழுச்சியில் பெண்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து 1913 இல் சுண்ணாகத்தில் இராமநாதன் கல்லூரியை நிறுவினார். இக்கல்லூரியின் தோற்றம் தமிழ்ப்பெண்களின் கல்வி முன்னேற்றத்தில் முக்கிய நிகழ்வாகும் என்பதை மறுக்கமுடியாது. அவர் 1921 ம் ஆண்டளவில் திருநெல்வேலியில் நிறுவிய பரமேஸ்வராக் கல்லூரி ஒரு பல்கலைக் கழகக் கல்லூரிக்குரிய வசதிகளோடு உருவாக்கப்பட்டது இது இரண்டு ஆண்டுகளில் லண்டன் பல்கலைக் கழக விஞ்ஞான பரீட்சையில் மாணவர் சித்தியடையும் தரத்தில் செயற்பட்டது. தமிழருக்குப் பெரும் வாய்ப்பாய் அமைந்தது.

சமூக பொருளாதார ஏற்றத் தாழ்வின்றி எல்லோருக்கும் கல்வி வாய்ப்பு வழங்க 9.12.1923 இல் சைவவித்தியாவிருத்தி சங்கத்தை நிறுவிச் சைவப்பிள்ளைகள் சமயம் மாறுக் கல்வி பெற வழிவகுத்த குழுவின் தலைவரும் அச் சபையின் முதல் முகாமையாளரும் இராமநாதன் அவர்களே.

"சேர் பொன்னம்பலம் இராமநாதன் இலங்கையின் தவப்புதல்வர்" என்றும் "தமிழருக்குக் கிடைத்த வரப்பிரசாதம்" எனவும் பேராசிரியர் க. கைலாசபதி குறிப்பிட்டு இராமநாதனின் காலம் நினைவு கூறப்பட்டு அவரது வாரிசுகளான பின் சந்ததியார் தென்பும், தெளிவும் பெற்று மகிழவராம் என மதிப்பீடு செய்துள்ளமை இங்கு நினைவு கூரத்தக்கது.

# சேர். பொன். இராமநாதனுக்கு

# பல்கலைக்கழகத்தில் இன்று

# நினைவுதின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக (பரமேஸ்வராக்கல்லூரி நிறுவுனர் சேர். பொன் இராமநாதனின் நினைவுதினம் இன்று திங்கட்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் கொண்டாடப்படவுள்ளது.

காலை 5 மணி முதல் 8 மணி வரை ஸ்ரீ பரமேஸ்வரா ஆலயத்தில் விசேட சங்காபிஷேகம் நடைபெறும்.

மாலை 3 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மங்களவிளக்கேற்றி மாலை நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைப்பார்.

பல்கலைக்கழக துணைவேந்தர் அ. துரைராசா நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்குவார். பல்கலைக்கழக இந்து மன்றத் தலைவர் திரு. ச. சிவானந்தம் வரவேற்புரை வழங்குவார்.

மருதனாமடம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆ. சிவானந்தசுந்தரம் சிறப்புரை வழங்கவுள்ளார். கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. மா. சின்னத்தம்பி தமிழர்நோக்கில் இராமநாதன் பணிகள்' எனும் தலைப்பில் நினைவுப் பேருரையாற்றுவார்.

இதனைத்தொடர்ந்து இசை யரங்கமும், 'மகிடாசுர சம்ஹாரம்' எனும் நாட்டிய நாடகமும் இடம்பெறும்.

(சு–72–159)

# நுளம்புத் தொல்லை

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் நுளம்புத் தொல்லை பரவலாக எல்லாப் பகுதிகளிலும் அதிகரித்துள்ளது. (154)

# இனத்தின் வளர்ச்சிக்கு

# கல்வி மிக அவசியம்

(நெல்லியடி)

"கல்வியை எமது மாணவர்கள் பேணிக்காத்துக் கொள்ளவேண்டும். ஒரு இனத்தின் வளர்ச்சிக்கும், மனித வளர்ச்சியை அபிவிருத்தி செய்வதற்கும், கல்வியே மிக அவசியமென்றாகும்"

இவ்வாறு உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பரிசளிப்பு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் திரு ஏ. துரைராசா குறிப்பிட்டார்.

கல்லூரி மண்டபத்தில் அதிபர் திருமதி பீ. இராஜேந்திரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தொடர்ந்து பேசிய துணைவேந்தர் மாணவர்களின் மன வலிமையை வளர்த்து, கல்வியிலும் வேறு துறைகளிலும் வெற்றிபெறச் செய்வதற்கு ஆசிரியர்கள் தமதுசுயநலத்தை மறந்து தம்மை அர்ப்பணித்து கல்வியூட்டவேண்டும் என்றார்.

மாணவர்களுக்கான பரிசில்களை துணைவேந்தரின் பாரியார் திருமதி இராஜேஸ்வரி-துரைராஜா வழங்கினார். (160)

# 1993ம் ஆண்டுக்குரிய

# பாடசாலைகளின்

# தவணை திகதிகள்

(உடுவில்)

1993ம் ஆண்டுக்குரிய பாடசாலைகள் நடைபெறும் தவணைத் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப்பாடசாலைகள் முதலாம் தவணை ஜனவரி மாதம் நாலாம் திகதி முதல் ஏப்ரல் மாதம் ஏழாம் திகதி வரை நடைபெறும்.

இரண்டாம் தவணை மே மாதம் மூன்றும் திகதி முதல் ஜூலை மாதம் முப்பதாம்திகதி வரையும் மூன்றும் தவணை செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் டிசம்பர் மாதம் மூன்றும் திகதி வரையும் நடைபெறும்.

இவ்வருடத்தில் குறைந்த பட்சம் 190 நாட்கள் பாடசாலைகள் இயங்கவேண்டும். ஏதாவது விசேட காரணங்களால் பாடசாலைகளை மூடுவதற்குரிய நிலைமை ஏற்பட்டாலோ. பாடசாலையை நடாத்த முடியாதுபோனாலோ அவற்றை சனிக்கிழமைகளில் நடாத்தி ஈடுசெய்ய வேண்டுமெனவும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (109)

# நிலத்திலிருந்து கல்வி

# கற்கும் மாணவர்கள்

(தாளையடி)

வடமராட்சி கிழக்கிலுள்ள பெரும்பாலான பாடசாலைகளில் மாணவர்களுக்கான தளபாடங்கள் பற்றாக்குறையாகவுள்ளன. முக்கியமாக இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து வந்த மாணவர்களுக்கென இப்பகுதியில் தற்காலிக பாடசாலைக் கொட்டகைகள் புனர்வாழ்வு, புனரமைப்பு திணைக்களத்தினால் அமைக்கப்பட்டுள்ளபோதும் மாணவர்கள் ஆசிரியர்களுக்குரிய தளபாடங்கள், கரும்பலகைகள் எதுவும் வழங்கப்படாமையினால் பெரும்பாலான மாணவர்கள் நிலத்தில் இருந்தே கல்வி பயில்கின்றனர்.

தளபாடக் குறைபாடுகள் பற்றி கல்வித் திணைக்களத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. (163)

# மத்திய அரசைக் கவிழ்க்க ஜெயலலிதா சதி முயற்சி!

(புதுடில்லி)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா இந்திய மத்திய அரசைக் கவிழ்க்கும் சதி முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சாட்டப்படுகிறது.

மத்திய அரசுடன் முரண்பட்டுக் கொண்டிருக்கும் ஜெயலலிதா தற்போது பாரதீய ஜனதா கட்சியுடன் தனது உறவைப் பலப்படுத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

அண்மையில் புதுடில்லி சென்ற ஜெயலலிதா முன்னாள் பிரதமர் திரு. சந்திரசேகரை புதுடில்லி விமான நிலையத்தில் சந்தித்து சுமார் அரை மணித்தியாலம் வரை பேச்சு நடத்தியுள்ளார். இதே வேளை ஜெயலலிதாவுக்கு பாரதீய ஜனதா கட்சித்தலைவர் திரு. வாஜ்பாய் டில்லியில் விருந்து வழங்கி கௌரவித்துள்ளார்.

அரசு விடயமாக புதுடில்லி சென்ற அவர் பிரதமர் திரு. நரசிம்மராவைச் சந்திக்காமலே தமிழ்நாடு திரும்பிவிட்டதாக கூறப்படுகிறது.

பாரதீய ஜனதாகட்சியுடன் சேர்ந்து தற்போதைய மத்திய அரசைக் கவிழ்க்கும் முயற்சியில் ஜெயலலிதா ஈடுபட்டு வருவதாக டாக்டர் சுப்பிரமணியம்சுவாமி குற்றம் சாட்டி வருவது குறிப்பிடத்தக்கது. (ரீ-சி)

## மரண அறிவித்தல்

### திருமதி நல்லம்மா

திருமதி நல்லம்மா காலமானார். இவர் S இராசசுந்தரம் (S. R. S) முன்னாள் காலி பிரபல்ய வர்த்தகரும் சுருட்டுத் தொழிலதிபர் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற இராஜேஸ்வரி, கமலேஸ்வரி, புவனேஸ்வரியினதும், கோண்டாவில் S. R. மகேந்திரன்ஸ் வர்த்தக உரிமையாளர்கள் மகேந்திரன், யோகேந்திரன் ஆகியோரின் அருமைத் தாயாரும், ஸ்ரீகிருஷ்ணு (கனடா), மகாலட்சுமி, புவனேஸ்வரி ஆகியோரின் மாமியாரும், முரளீதரன், சுஜீவா, காயத்திரி, சஞ்சீர், மதுசங்கர், கௌரிசங்கர், வாணி (கனடா), அகில் (கனடா) ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரின் மரணச்சடங்குகள் இன்று 30-11-92 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரிகைகளிற்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S. இராசசுந்தரம் (S R. S.)
குடும்பத்தினர்

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (சி- 7011)

### காசிப்பிள்ளை வள்ளியம்மை

புங்குடுதீவு 2-ம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும் செம்மாதர ஒழுங்கை ஜும்மா பள்ளி வாசல் அருகாமையில் 14/1 வசிப்பிடமாகக் கொண்டவருமான காசிப்பிள்ளை வள்ளியம்மை காலமாகி விட்டார். இவர் அருணாசலம் செல்லம்மாவின் அன்பு மகளும் காலஞ் சென்ற காசிப்பிள்ளையின் அன்பு மனைவியும் தம்பையா நாகமுத்து ஆகியோரின் மருகளும் மனோன்மணி (வறணம்) இலட்சுமணன் ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற ஜோர்ஜ், அருந்ததி ஆகியோரின் அன்பு மாமியும், அருள்நேசன், அருள் முருகன், அருட்செல்வன், பிரதீபன், பிரபாகரன், வசந்தரூபன், வசிகரன், பாஸ்கரன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் காலஞ்சென்ற ராமலிங்கம், காலஞ் சென்ற நாகம்மை காலஞ் சென்ற சுப்பிரமணியம் கனகசபை, ராசம்மா, சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று 30-11-92 திங்கட்கிழமை பி. பகல் 2-00 மணியளவில் கோம்பையன் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

தகவல்;
(மனோன்மணி) வறணம்

14/1, ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (சி-7012)

### வேலு பிள்ளை கந்தையா

புங்குடுதீவு வல்லன் 8ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஆறுகால் மடத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான வேலுப்பிள்ளை கந்தையா மரணமடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை வையகத்தின் அன்பு மகனும், காலஞ்சென்ற தையல்முத்து, வள்ளியம்மை, சின்னத்துரை, மற்றும் பொன்னம்மா, செங்கமலம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கதிரவேலு-இலட்சுமியின் அன்பு மருமகனும், பொன்னம்மாவின் அன்புக் கணவரும், ஞானேஸ்வரி, லோகேஸ்வரி, சதானந்தன், கபிலர் (கண்ணன்), நித்தியானந்தன், ரோஜாரமணி ஆகியோரின் அன்புத் தந்தையும், கொட்டடி துரைராசா, செல்லக்கண்ணு, யோகம்மா, ராஜேஸ்வரி, காலஞ்சென்ற ரதிதீகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவபாலன், செல்வராசா (சக்தி ஸ்ரோர்ஸ், சுண்டுக்குளி), விக்னேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரசன்னா, தசாயினி, ஷர்மினி, பாமினி, பிரதீபன், டெனீசன், ஜனனி, பகீரதன், நிரோஷன், விபூஷா, துவாரகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார் அன்னாரின் இறுதிக் கிரியைகள் 30-11-92 இன்று திங்கட்கிழமை நடைபெற்று பூதவுடல் பி.ப. 3 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக கோம்பையன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
க. செல்வராசா
(மருமகன்)

பாடசாலை லேன்,
ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை. (சி-7014)

## விபத்தில் சிக்கி கமலஹாசன் காயம்

(சென்னை)

பிரபல நடிகர் கமலஹாசன் விபத்தொன்றில் சிக்கி காயமடைந்துள்ளார்.

வெளிப்புற படப்பிடிப்புக்கு சென்று கொண்டிருக்கும் போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதென்று தெரியவருகின்றது.

இவர் பயணம் செய்த கார் விபத்தில் சிக்கியதால் இவருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (சு)

### யுத்தம் நிறுத்தப்பட்டால்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யடிக்க முடியும்''.

கந்தளாயில் நேற்று நடைபெற்ற ஆடை தயாரிப்பு தொழிற்சாலை திறப்பு விழா வைபவத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி பிரேமதாசா மேற்கண்டவாறு தெரிவித்தார். (க)

### ராணுவ நடவடிக்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ நிபுணர்கள் இந்த முகாமகளுக்கு அண்மையில் நேரடி விஜயம் மேற்கொண்டனர்.

இக்குழுவினர் இப்பகுதிகளில் நடைபெறும் இராணுவ நடவடிக்கைகள் குறித்து மீளாய்வு செய்ததுடன் தொடரும் தாக்குதல்கள் குறித்து ஆராய்ந்தனர் என்றும் தெரிய வருகிறது.

திருமலை அனுராதபுரம், தீவுப்பகுதிகளிலுள்ள இராணுவ முகாம்களுக்கு இவர்கள் நேரடி விஜயத்தினை மேற்கொண்டிருந்தனர்.

அண்மையில் பலாலி கிழக்கு எல்லையில் புலிகள் நடத்திய தாக்குதலில் காயமடைந்து அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் படையினரைப் பார்வையிட்டு அவர்களுக்கு இக்குழுவினர் ஆறுதல் தெரிவித்தனர்

இராணுவ முகாம்களில் படையினரை நேரில் சந்தித்து அவர்களை உற்சாகப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ரி-சு)

### 1,48000 பேரின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பின்றி அவதியுறுகின்றனர்.

மேற்கண்டவாறு யாழ். மாவட்ட அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் இணையம் தெரிவித்துள்ளது.

பெரும்பாலான தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதனாலேயே மேற்படி அவலநிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (க)

## ஷெல் தாக்குதல் இரு வீடுகள் சேதம்

(பண்டத்தரிப்பு)

மாதகல் இராணுவ முகாமிலிருந்து கடந்த சில தினங்களாக இரவு வேளைகளிலும், பகல் வேளைகளிலும் அடிக்கடி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது

நேற்று முன்தினம் பகல் ஒரு மணியளவில் அங்கிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் பண்டத்தரிப்பு தேவாலயத்திற்கு அண்மையாக விழுந்து வெடித்ததால் இரு வீடுகள் பலத்த சேதமடைந்தன.

இதேவேளை துப்பாக்கி வேட்டுச் சன்னங்களும் இப்பகுதியில் அடிக்கடி வந்து விழுகின்றதாக தெரிவிக்கப்படுகின்றது. [72]

## வானொலி, ரி.வி. பெட்டிகள் குறித்து பொலிஸார் எச்சரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் வாயுசிலிண்டர்கள், வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளை அறிமுகமில்லாதவர்களிடமிருந்து பாரமெடுக்க வேண்டாமென பொலிசார் எச்சரித்துள்ளனர்.

இவற்றைக்கொண்டு வருபவர்களை அடையாளம் கண்டபின்பே இவற்றை பாரமெடுக்குமாறும் அவர்கள் கூறியுள்ளனர்.

அண்மைக்காலமாக மட்டக்களப்பில் தொலைக்காட்சிப் பெட்டிகளிலும், வானொலிப் பெட்டிகளிலும் குண்டு வைக்கப்பட்டு வெடிப்பதை அடுத்தே பொலிசார் இவ் எச்சரித்துள்ளனர்.

## மாவீரரின் பெற்றோருக்கு வடமராட்சியில் கௌரவம்

(நெல்லியடி)

வடமராட்சிப் பகுதியில் மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் வகையில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் 26ம் திகதி கடற்புலி, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, பொலிகண்டி, பருத்தித்துறை, புலோலி ஆகிய இடங்களைச் சேர்ந்த 227 குடும்பங்களைச் சேர்ந்த 660 மக்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வைபவவேளை, விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் திரு. யோகரட்ணம் யோகி, கடற்புலி தளபதி திரு சூசை, வடமராட்சித் தளபதி ... செல்வம் உட்பட இன்னும் பலர் மாவீரரின் பெற்றோர்களை நேரடியாக சந்தித்து உரையாடிச் சென்றுள்ளனர்.

அங்கு கலை நிகழ்ச்சிகளாக விடுதலைப் புலிகள் பண்பாட்டுக்கழக ஆதரவில் மாவீரர்களின் பெற்றோரை கௌரவிக்கும் புரட்சிக் கீதம் நாதஸ்வர சகிதம், வில்லிசையாக இடம்பெற்றன. (160)

### பயிற்சி வகுப்பு

(பண்டத்தரிப்பு)

அரசாங்க மருந்துக் கலவையாளர்கள் சங்க யாழ். கிளை வினைத்திறமை காண் தடைப் பரீட்சைக்கு தோற்றும் மருந்துக் கலவையாளர்களின் நலன் கருதி பயிற்சி வகுப்புகளை யாழ். நகரில் நடாத்துவது என்று தீர்மானித்துள்ளது. (72)

### புத்தகம் கட்டும் பயிற்சி

(நெல்லியடி)

பருத்தித்துறை இந்து இளைஞர் சேவை மன்றம், புத்தகம் கட்டும் பயிற்சியை கடந்த 27-ம் திகதி மேற்படி மன்ற மண்டபத்தில் ஆரம்பித்துள்ளனர். இதில் சேர விரும்புவோர் மன்றச்செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (160)

### கடற்றொழிலாளர் சங்கங்களின் ஒன்றியம்

(உடுவில்)

வலிகாமம் தெற்கு, வலிகாமம் மேற்கு ஆகிய பிரதேசங்களில் உள்ள கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்புக்கள், மற்றும் கூட்டுறவுச்சங்கங்கள் ஆகியன ஒன்றிணைந்த ஒன்றியம் ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை கிழக்கு கடற்றொழில் பரிசோதகர் திரு. து. விக்கினேஸ்வரன் தலைமையில் மானிப்பாய் புனித அன்னம்மாள் தேவாலய மண்டபத்தில் நடைபெற்ற இவ்வங்குரார்ப்பண வைபவத்தில் ஒன்றியத் தலைவராக திரு. ம யோசேப்பும், செயலாளராக திரு. க. செபஸ்தியாம்பிள்ளையும் தெரிவு செய்யபபட்டனர். (109)

### கல்லுண்டாயில் 2000 பனம்விதை நாட்டப்பட்டது

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக பனை, தென்னைவள அபிவிருத்தி ஒன்றியப் பகுதியினர் இவ்வருடம் பனை நடுகைத் திட்டத்தின் கீழ் மானிப்பாய் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக யாழ். கல்லுண்டாய் வெளி பகுதியில் 2000 பனம், விதைகள் நடும் பணியைமேற்கொண்டனர்.

மேற்படி நிகழ்ச்சியில் தென்னை வள அபிவிருத்தி ஒன்றியப் பகுதியினர், மானிப்பாய் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள், ஆனைக்கோட்டை கிராமிய உற்பத்திக்குழுவினர் தமிழீழபொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தின் வலிசரமம் பிரிவு ஊழியர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### பத்து வருடப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள்.

இவ்வாறு அரசியல் பிரமுகர்கள், புத்தி ஜீவிகள், சமயப் பெரியோர் ஆகியோரைக் கொண்ட குழு அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. (க)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு நவம்பர் மாதம் 30ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Reglstered as a New Paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10336/8